අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

My Ref. ED/01/21/02/01 Your Ref. Date 2023.05.19

சுற்றறிக்கை இலக்கம் :- 24/2023

சகல மாகாண பிரதான செயலாளர்கள்
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டங்களுக்கு பொறுப்பானபிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள்
சகல பாடசாலை அதிபர்கள்

## பாடசாலை பிள்ளைகள் தொடர்பாக உணவு வழங்கும் அரச போஷாக்கு செயற்றிட்டம்

கல்வி அமைச்சு மற்றும் மாகாண சபைகளின் கீழ் செயல்படுத்தப்படும் அரச பாடசாலைகளின் பிள்ளைகளுக்காக உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டம் இந்த சுற்றிக்கை மூலமாக தழுவப்படுகின்றது. பாடசாலை பிள்ளைகள் தொடர்பாக உணவு வழங்கும் செயற்றிட்டத்திற்கு பங்களிப்பு வழங்கப்படும் அல்லது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் சகல வெளிதரப்பினர் மற்றும் நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் கல்வி அதிகாரிகளின் அனுமதியின் கீழ் இந்த சுற்றறிக்கைக்கமைவாக செயல்படுவது கட்டாயமாகும். அத்துடன் மாகாண சபைகளின் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளில் போஷாக்கு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தப்படும் போது நிதி ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2022.12.21 ஆம் திகதிய FC/PDP/01/01/2023 ஆம் இலக்க வழிகாட்டுதலை பின்பற்றுவது அவசியமாகும்.

நிதி ஆணைக்குழு மற்றும் சுகாதார அமைச்சின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த சுற்றிக்கை வெளியிடப்படுவதுடன்,. பாடசாலை போஷாக்கு செயற்றிட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2017.05.19 ஆம் திகதிய 10/2017 ஆம் சுற்றிக்கையை மீறி இந்த சுற்றிக்கையானது எதிர்காலத்தில் நடைமுறையில் இருக்கும்

"ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான சந்ததியினர்" என்பது இந்த செயற்றிட்டத்தின் தலைப்பு என்பதுடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் எழும் போஷாக்கு பிரச்சினைகளை குறைத்தல், நாளாந்த பாடசாலை வருகையை வளர்ச்சியடைய செய்தல், நல்ல உணவு பழக்கங்கள் மற்றும் சுகாதார பழக்கங்களை விருத்தியடைய செய்தல், கல்வி அடைவுமட்ட வளர்ச்சிக்காக பங்களிப்பு செய்தல் மற்றும் உள்நாட்டு உணவு கலாசாரத்தை கட்டியெழுப்புதல் இந்த செயற்றிட்டத்தின குறிக்கோளாகும்.

பாடசாலை பிள்ளைகளுக்காக உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தை செயல்படுத்துவது ஒவ்வொரு வருடத்திலும் ஜனவரி மாதம் இரண்டாம் திங்கட் கிழமை முதல் ஆரம்பிக்க வேண்டியதுடன் அதற்காக பின்வரும் செயல்முறையினை பின்பற்ற வேண்டும்.

கௌரவ அமைச்சர் Hon. Minister +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
செயலாளர் Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

1. தேசிய, மாகாண மற்றும் வலய மட்டத்தில் பாடசாலை பிள்ளைகளுக்காக உணவு வழங்கும் செயற்றிட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு சுகாதார ஊக்குவிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படுவதுடன் அந்த குழுவை சுறுசுறுப்பாக வைத்திருத்தல் மற்றும் அதன் மூலமாக மதிப்பீடு மற்றும் ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளுதல்

1.1. செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் பாடசாலை அபிவிருத்தி சங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றை செய்துக்கொள்ளல். (இணைப்பு 01 மற்றும் 01-I)
1.2. நிதி நெருக்கடி உள்ள பாடசாலைகளுக்கு வருட ஆரம்பத்தில் ஒரு மாதத்திற்குத் தேவையான நிதியில் 50% முன்பணமாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்திறகு வழங்குதல்
1.3. குறைந்தபட்ச மாணவர் எண்ணிக்கையுடன் கூடிய சிறிய பாடசாலைகளுக்காக தேவைக்கேற்ப மாற்று வழிகளை அறிமுகப்படுத்தல்
1.4. மாகாண வலய ஒருங்கிணைப்பு அலுவலர்களை முறையாக நியமித்தல் (இணைப்பு 02) மற்றும் அத்தகவல்களை கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல்
1.5. பாடசாலை தவணைகளுக்கு ஒருமுறை குறைந்தபட்சமாக ஒரு முறையாவது பாடசாலை உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்ட ஒழுங்குமுறை/மேற்பார்வையை உறுதி செய்தல் (இணைப்பு 03)
1.6. முறையாக ஆவணங்களை பேணுதல் மற்றும் குறிப்பாக பொறுப்புகளை ஒப்படைத்தல்

2. உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டம் தொடர்பாக பாடசாலைகளை தெரிவுசெய்தலை பின்வருமாறு மேற்கொள்ளுதல்

2.1. 100 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் அனைத்து மாணவர்களை – ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாடசாலையானால் சமகாலத்தின் மாணவர் எண்ணிக்கை 100 க்கும் மேலாக இருப்பினும் அவ்வாரே பராமரித்தல்
2.2. பிற பாடசாலைகளில் 1 முதல் 5 ஆம் தரங்களின் மாணவர்கள்- இந்த பாடசாலைகளை தெரிவு செய்யும்போது போஷாக்கு நிலை உயர் மட்டத்தில் இருத்தல், தோட்டபுறத்தில் அல்லது தோட்டங்களில் அமைந்துள்ள பாடசாலையாக இருத்தல் கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் பாடசாலை அமைந்திருத்தல். அதிக வறுமையான பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

2.3 6 ஆம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையிலான மாணவர்களை - அரசாங்க பாடசாலை பிள்ளைகளின் போஷாக்கு ஒத்துழைப்பு நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குவதற்கு உள்ள இயலுமையை கருத்திற்கொண்டு உணவு வழங்கும் பாடசாலைகள் மற்றும் தரங்கள தொடர்பாக தீர்மானித்து மாகாண அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கு நிரல் அமைச்சின் மூலமாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

2.4 விசேட கல்வி அலகுகள் அல்லது பாடசாலைகள்
2.5 தெரிவுசெய்யப்பட்ட பிரிவெனாக்களின் சாதாரண மாணவர்கள்-தேவைக்கேற்ப துறவி மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளுதல்

3. பாடசாலை மட்டத்தில் உணவு வழங்குதல்

3.1. உணவு வழங்கப்படும் நேரம்

அதிகமான மாணவர்கள் காலை உணவின்றி வருகைத்தருவது மதிப்பாய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதுடன் காலை உணவு. தினசரி உணவில் முக்கியமான உணவாக இருப்பதால் இந்த உணவு வழங்கும் நேரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் தினசரி கல்விச் செயற்பாடுகள் தொடர்பாகவும் காலை உணவு சம

அளவான உணவாக இருப்பது முக்கியமாகும். அதன் பிரகாரம் பாடசாலை தொடங்கி முதல் ஒரு மணிநேரத்திற்குள் அதாவது காலை 7.30 – 8.30 வரையில் உணவு வழங்குதலை மேற்கொள்ள வேண்டும்.. விசேட காரணங்களினால் அன்றாட உணவு வழங்கும் நேரத்தை மாற்றுவதாக இருந்தால் அது தொடர்பான முன் அனுமதியனை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். விசேட காரணங்களின் அடிப்படையில் நாளாந்தம் உணவு வழங்கப்படும் நேரங்களை மாற்றும்போது அது குறித்தான அனுமதியினை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும். விசேட தினங்களில் அவ்வாறு நேரங்களை மாற்றும்போது அது குறித்து லொக் குறிப்பொன்றை மாத்திரம் வைப்பது போதுமானதாகும்.

3.2. **உணவு வழங்கும் பொறுப்பு -** உணவு வழங்கும் பொறுப்பை பாடசாலை அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைக்கப்படும்.

3.2.1. வருட ஆரம்பத்தில் செயற்றிட்டத்தை தொடங்குவதற்கு முன்னால் வலயக் கல்விப் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றை செய்துக்கொள்ளல் (இணைப்பு 01)
உணவு தயாரிக்கும் இடத்திற்கு பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை அதனுடன் இணைத்திருத்தல் (இணைப்பு 04)

3.2.2. உணவு செயற்றிட்டத்திற்குரிய மாணவர் எண்ணிக்கை தகவல்கள். உணவு வழங்குதல் தொடர்பான தகவல்கள் மற்றும் கிடைக்கும் உதவிப் பொருட்கள் மற்றம் நிதி தொடர்பான தகவல் அறிக்கைகளை முறையாக பேணுதல்.

3.2.3. உணவு தயாரித்தல் பாடசாலையில் அல்லது அதற்கு வெளியே ஒரு குறிப்பிட்ட குழுவொன்றின் மூலமாக மேற்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு ஈடுபடுத்தும் குழுவின் சுகாதார நிலை தொடர்பான அறிக்கைகளை பேணுதல்

3.2.4. உணவு தயாரித்தலை பாடசாலைக்குள் மேற்கொள்வதாக இருப்பின் அதற்காக ஈடுபடுத்தப்படும் ஆளணிகள் தொடர்பான தகவல்களை பராமரித்தல் மற்றும் பாடசாலைக்கு வெளியே மேற்கொள்வதாயின் முறையான நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் துணை உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல். (இணைப்பு 01-I) இதற்காக பெற்றோர்கள் குழாம், சமுர்த்தி அபிவிருத்தி சங்கம், மகளீர் அமைப்புகள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் போன்ற அமைப்புகளுடன் தேவைக்கேற்ப செயல்புரிதல்

3.2.5. தினசரி ஒழுங்குமுறைகள் தொடர்பான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.

4. **ஒவ்வொரு பாடசாலையிலும் உணவுக்குழுக்கள் செயல்படுத்தப்பட வேண்டியதுடன் உணவின் பாதுகாப்புத் தன்மையை உறுதிசெய்தல் உணவுக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.. கல்வி அமைச்சின் பாடசாலை உணவகத்தை நடத்திச்செல்வதற்கு உரிய 35/2015 ஆம் சுற்றறிக்கையின் படி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் துணைக்குழுவாக பாடசாலை உணவுக்குழு, அதிபர் அல்லது அதிபரால் பெயரிடும் பிரதி அதிபர் ஒருவரின் தலைமையில் நடத்தப்படவேண்டியதுடன் அதன் கலவை பின்வருமாறு அமைய வேண்டும்.**

**4.1. கலவை**

4.1.1. அதிபர்/ பிரதி அதிபர் (குழுத்தலைவர்)
4.1.2. பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு செயற்றிட்டத்திற்குரிய ஆசிரியர்
4.1.3. பாடசாலைக்குரிய பிரதேசத்தில் பொது சுகாதார பரிசோதகர்
4.1.4. பாடசாலை சுகாதார மாணவர் சமூகத்தின் உறுப்பினர் ஒருவர்
4.1.5. சுற்றுச்சூழல் குழுவின் உறுப்பினர் ஒருவர்
4.1.6. பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்
4.1.7. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்

4.1.8. தலைமை மாணவர் தலைவர்/ தலைவி அல்லது வேறு மாணவர் தலைவர்/ தலைவி
4.1.9. பாடசலை நுகர்வோர் வட்டத்தின் உறுப்பினர் ஒருவர்
4.1.10 பாடசாலை நுகர்வோர் வட்டத்தில் உறுப்பினர்

குழுத் தலைவருடன் மேற்படி உறுப்பினர்கள் ஆறுபேரை கொண்ட குழுவாக இருத்தல் வேண்டும். பொது சுகாதார பரிசோதகரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது பெற்றுக்கொள்ள வேண்டும்.

**4.2. உணவுக்குழுவினால் பின்வரும் பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பாதர்க்கப்படுகின்றது..**

4.2.1. உணவு வழங்கல் தொடர்பாக நாள்தோறும் பரிச்சித்துப் பார்த்தல். (இணைப்பு 05)
4.2.2. உணவின் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தல்
4.2.3. சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் அதிக எண்ணை, அதிக உப்பு, அதிக இனிப்பு செயற்கை சுவைகள் மற்றும் வர்ணங்கள் உணவுடன் சேர்ப்பதற்கு இடமளிக்காமல் இருத்தல்
4.2.4. பாடசாலை உணவக சுற்றிக்கையின் பிரகாரம் பயன்படுத்தலை தடைசெய்துள்ள உணவு ஊக்குவிப்பினை தடுத்தல்
4.2.5. நீர் மற்றும் சுகாதார வசதிகளின் தரம் தொடர்பாக ஆராய்ந்து முறையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்

## 5. உணவு தயாரிக்கப்படும் இடங்களில், தயாரிக்கம் செயல்பாடு மற்றம் விநியோகிக்கும் செயற்பாட்டின் பொருத்தத்தை உறுதிப்படுத்தல்.

5.1. பாடசாலையினுள் அல்லது அதன் வெளியே உணவு தயாரிக்கப்படும் இடம், மூலப்பொருட்கள் களஞ்சியப்படுத்தும் இடம் மற்றும் உணவு தயாரிக்கப்படும் முறையை பரிசோதனை செய்து அதன் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கையை பெற்றுக் கொள்ளுதல் (இணைப்பு 04)
5.2. குறைந்த பட்சம் 06 மாதங்களுக்கு ஒரு முறையாவது உணவு தயாரித்தல் தொடர்பாக ஆராய்ந்து சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
5.3. உணவுக் குழு, சுகாதார ஊக்குவிப்புக் குழுவினால் உணவின் பாதுகாப்பு தொடர்பாக அடிக்கடி ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளல்
5.4. உரிய கல்வி அலுவலகத்தினால் சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து உணவு செயற்றிட்டத்தை மேற்பார்வை செய்பவர்களுக்கு மற்றும் உணவு வழங்குவதற்கு ஒத்துழைப்பவர்களுக்கு உணவின் பாதுகாப்பினை பேணுதல் தொடர்பான பயிற்சியொன்றை வருட ஆரம்பத்தில் வழங்குதல் மற்றும் அப்பரீட்சையை பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பான அறிக்கைகளை வைத்துக்கொள்ளுதல் (இணைப்பு 06)
5.5. உணவு தயாரிக்கும் செயற்பாடுகள் தொடர்பாக சுகாதார பாதுகாப்புடன் பானைகள் மற்றும் பாத்திரங்கள் முறையாக பராமரித்தல்

## 6. உணவு வழங்கும் செயற்றிட்டத்திற்குரிய தகவல்களை முறையாக பேணுதல்

### 6.1. அடிப்படைத் தகவல்கள்

6.1.1 செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் முன் மாணவர் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை முறையாக வழங்குதல மாணவர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் முறையாக தயாரிக்கப்பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளர மூலமாக மாகாண தலைமைச் செயலாளர் அல்லது அவரால் எழுத்துமூல அதிகாரம் வழங்கும் அலுவலர் மூலமாக அநுமதியினை பெற்றுக்கொள்ளல் (இணைப்பு 07). அதன் பிரதிகள் கட்டாயமாக கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல்

6.1.2 i. தினசரி மாணவர் வருகையின் சுருக்க அறிக்கை (வகுப்பு பெயர் பட்டியலின் அடிப்படையில்) மற்றும் மாணவர்களின் போஷாக்கு நிலை தொடர்பான அறிக்கை (இணைப்பு 08) பாடசாலையினால் தவணைக்கு ஒருமுறை தயாரித்து பேணுதல்

ii. பாடசாலையினால் தினசரி வருகை, போஷாக்கு நிலை, கல்வி அடைவு மட்டம் தொடர்பான தகவல்களை வருடாந்தம் வலயக் கல்வி அலுவலனத்திற்கு முன்னிலைப்படுத்தல்

iii. வலய மற்றும் மாகாண மட்டத்தில் சுருக்க அறிக்கைகளை தயாரித்து நிதி ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சிற்கு முன்னிலைப்படுத்தல்

6.1.3 உணவு தயாரிப்பதில் பங்கேற்பவர்களின் பெயர், முகவரி, சுகாதார நிலை தொடர்பான தகவல்கள் தொடர்ச்சியாக பாடசாலையினால் பராமரித்தல். துணை ஒப்பந்தங்களுடன் பாடசாலைக்கு வெளியே உணவு தயாரிக்கப்படும் போது அவர்களின் வங்கி கணக்கு தொடர்பான விரஙங்கள் மேற்படி தகவல்கலுக்கு மே மலதிகமாக பேணுதல்

6.2. நிதி தொடர்பான தகவல்கள்

6.2.1 ஒவ்வொரு மாதத்திலும் 05 ஆம் திகதிக்கு முனனர் பாடசாலையினால் மாதாந்த செலவின அறிக்கையை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தல் (இணைப்பு 09)

6.2.2. ஒவ்வொரு மாதத்திலும் 10 ஆம் திகதிக்கு முனனர் வலயக் கல்வி அலுவலகத்தினால் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகள் தொடர்பான செலவினங்களை உறுதிப்படுத்தல். மாதாந்த செலவுகள் தொடர்பான நிதியை பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு பெற்றுக்கொடுத்தல் மற்றும் சுருக்க அறிக்கைகளை தயாரிக்கப்பட்ட மாதாந்த செலவுகள் தொடர்பான அறிக்கையை வலயக் கல்விப் பணிப்பாளரினால் மாகாண தலைமைச் செயலாளருக்கு ஒரு பிரதியுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். (இணைப்பு10)

6.2.3 மாதாந்த வருமானம் தொடர்பாக சுருக்கமாக தயாரிக்கப்படும் அறிக்கை வலய மட்டத்தில் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதி மாகாணக் கல்வி அமைச்சின் மூலமாக மாகாணக் கல்விச் செயலாளருக்கு வழுங்கப்பட வேண்டும். அந் அறிக்கையின் ஒரு பிரதியை மாகாண தலைமைச் செயலாளர் மூலம் கல்வி அமைச்சிற்கும், மாகாண சபையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு செயலாளர்களுக்கும், நிதி ஆணைக்குழுவின் செயலாளருக்கும், தேசிய பாதீட்டு திணைக்களம், திறைசேரி செயல்பாட்டுத் துறை பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும். தேசிய பாடசாலைகள் தொடர்பாக வலய மட்டத்தில் தயாரிக்கப்பட்ட விரிவான செலவின அறிக்கையை பணிப்பாளர் நாயகம் (திறைசேரி செயல்பாட்டுத் துறை) பணிப்பாளர் நாயகம், (தேசிய பாதீட்டுத் திணைக்களம்), மத்திய திறைசேரியின் செயலாளர் (மாகாண சபை விடயத்துறை நிரல் அமைச்சு) ஆகியோருக்கும் ஒரு பிரதியுடன் நேரடியாகவே கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளைக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். (இணைப்பு 11)

6.2.4 தேசிய பாடசாலை தொடர்பாக மற்றம் மாகாண பாடசாலைகள் தொடர்பான சுருக்கமான நிதி அறிக்கை மாதாந்தம் நிரல் கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு கிளையினால் தயாரிக்கப்பட வேண்டும்.

7. பொறுப்புக்களை முறையாக ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல்

7.1. சகல பாடசாலைகளிலும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் மூலமாக உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டங்களை செயல் படுத்துவது மற்றும் உரிய தகவல்களை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்

7.2. உணவு குழுக்களை குறிப்பாக இனங்காணுதல் மற்றும் அவர்களால் உணவு செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்துதல்

7.3. பாடசாலை மட்டத்தில் உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவரை பெயரிடுதல் மற்றும் செயற்றிட்டத்திற்குரய தகவல்களை முறையாக பேணுதல்

7.4. i. மாகாண மட்டத்தில் செயற்றிட்டஙகளுக்குப் பொறுப்பான பிரதி/உதவி கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் மற்றும் ஒழுங்குமுறை, மதிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளுதல்

ii சகல 10 பாடசாலைகளுக்கும் ஒருவர் என்ற ரீதியில் தொடர்ச்சியாக மதிப்பீட்டு பணிகளுக்கு உதவி புரிவதற்காக குழுவொன்றை நியமித்தல்.(இணைப்பு 12)

7.5. பாடசாலையினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தப்படும் மாதாந்த செலவின அறிக்கை தகவல்களை ஒரு கோவையின் மூலமாக பராமரித்தல். செலவுகளை மேற்கொண்ட பின்னர் செலுத்தல்கள் தொடர்பான சரியான அறிக்கைகளை பேணுதல்.

7.6. மாகாண மற்றும் வலய மட்டத்தில் நியமிக்கப்படும் உணவு வழங்கும் செயற்றிட்டத்திற்குப் பொறுபபான பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர் ஒருவரினால் செயற்றிட்ட ஒழுங்குமுறை, மதிப்பீடு ஒருங்கிணைப்பு செயறபாடுகள் முறையாக மேற்கொள்ளுதல்

7.7. வலய, மாகாண மட்டத்தில் பாடசாலை செயற்றிட்டத்தின் உதவி தொடர்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர் /முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்.

7.8. கோட்டத்திற்குப் பொறுப்பான/ உதவி கல்விப் பணிப்பாளரினால் பாடசாலை மேற்பார்வையின் போது உணவு வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான ஒழுங்குமுறைகளை மேற்கொள்ளுதல் மற்றம் பாடசாலை தவணைக்கு ஒருமுறை ஒழுங்குமுறை அறிக்கையினை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்குதல். கோட்ட மட்டத்தில் தொடர்ச்சியான ஒழுங்குமுறை பணிகளை இலகுவாக்குவதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் /முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல். கோட்ட மட்டத்தில் தகவல்களை சேகரித்தல

7.9. மாகாண மற்றும் வலய மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் பிற மேற்பார்வை நடவடிக்கைகளின் போது பாடசாலை உணவு வழங்கும் செயற்றிட்டம் தொடர்பாக மேற்பார்வை செய்தல

7.10. தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சின் சுகாதார மற்றும் போஷாக்கு கிளையில் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பின் கீழ் செயற்றிட்ட ஒழுங்குமுை, மதிப்பீடு மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7.11. ஒவ்வொரு மட்டத்திலான உத்தியோகத்தர்களின் பொறுப்பு மற்றும் கொறுப்புக்கூறல் ஆலோசனை கையேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதற்கமைவாக எழுத்துமூலம் உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல்

8. பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகளின் தினசரி ஆற்றல் (கலோரி) மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பண்புத்தரத்துடன் மற்றும் அளவான உணவை வழங்குதல்

8.1. தினசரி கலோரி மற்றும் போஷாக்குத் தேவைகளில் குறைந்தபட்சம் 1/3 பூர்த்தி செய்யும் வகையில் உணவை தயாரித்தல்

8.2. சுகாதார அமைச்சில் மற்றும் கல்வி அமைச்சின் பரிந்துரைகள் பெறும் சந்தர்ப்பங்களில் உரியவாறு தரத்தினால் உயர்த்தப்பட்ட அரிசி மற்றும் பிற உணவு மூலப்பொருட்களை பாடசாலை உணவு வேளைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

8.3. கல்வி அமைச்சின் பரிந்துரைகளின் அடிப்படையில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட உணவு பட்டியலின் படி (இணைப்பு 13) உணவை தயாரித்து வழங்குதல் பாடசாலை உணவு பட்டியலை தயாரிப்பது தொடர்பாக முறையாக பயிற்சி பெற்ற அலுவலர் ஒருவர் இருக்கும் சந்தர்ப்பத்தில் பிராந்திய தேவைகளின் அடிப்படையில் உணவு பட்டியல்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதுடன் அதனை பாடசாலை ஊணவுக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் தயாரித்தல் அவ்வாறான சந்தர்ப்பங்களில் உணவு வகைகள் மற்றும் போஷாக்கு தரத்தை தினசரி போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உணவு பதிவு குறிப்புகளை பதிவு செய்தல்

8.4. சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் அதிக எண்ணை, அதிக உப்பு, அதிக இனிப்பு, செயற்கை பதார்த்தங்கள், வர்ணங்கள் உள்ளடக்கப்பட்ட உணவு வகைகளை ஊக்குவிப்பதை தவிர்த்தல்

8.5. 1980 இலக்கம் 26 ஆம் உணவு சட்டத்தின் விதிமுறைகளின் படி 2003 இலகக்ம் 09 ஆம் நுகர்வோர் நடவடிக்கை தொடர்பான சட்டத்திற்கமைவாக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

8.6. வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் அனைத்து பாடசாலைகளுக்குரியவாறு உணவு பாதுகாப்பு தொடர்பாக உறுதிப்படுத்தி பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை (இணைப்பு 14) பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது அந்த நிலையினை உறுதிப்படுத்திக் கொள்தல்

8.7. தினசரி வழங்கப்படும் உணவு தொடர்பான ஒழுங்முறை அறிக்கைகளை வகுப்பு மட்டத்தில் பராமரித்தல்

8.8. (மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கு முன் உணவுக்குழுவினால் தினசரி உணவின் அளவு மற்றும் தரத்தை உறுதிப்படுத்தல் நாளாந்த உணவுடன் கூடிய தட்டின் போட்டோ ஒன்றை பெற்றுக்கொள்ளுதல் மற்றம் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படும் தகவல் முறைமையை நாளாந்தம் உள்ளடக்குதல்

## 9. பணம் செலவழித்தல்

ஒரு மாணவருக்காக தினசரி உணவுவேளை தொடர்பாக செலவிடும் பணம், நிலவும் உணவு விலைகளின் படி கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு குழு மூலமாக தீர்மானிக்கப்பட்டு உரிய தரப்பினரை அறிவுறுத்த வேண்டும்.

9.1. வருட ஆரம்பத்தில் உடன்படிக்கைகள் கைச்சாத்திட்ட பின்னர் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு பாடசாலையின் உணவு செயற்றிட்டம் தொடர்பாக தேவைப்படும் மாதாந்த செலவில் 50% வீதமான தொகையை முன்பணமாக செலுத்துதல்

9.2. மாதாந்த செலவின அறிக்கைகள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு செலவை மீளசெலுத்துதல் மற்றும் வருட இறுதி மாதத்தில் முன்பணத்தை மீளசெலுத்துதல்

9.3. சமகால விலை நிலவரங்களின் படி ஒரு மாணவருக்கான தினசரி உணவுக்காக ரூ.85/- பெருமதியான பணம் ஒதுக்கப்படும்.

9.4. தேசிய மட்டத்தில் ஆறு மாதத்திற்கு ஒருமுறை உணவு விலைகளின் படி தினசரி உணவிற்காக செலவிடப்படும் தொகையினை தேவைக்கேற்ப திருத்தப்பட்டு உரிய தரப்பினரை அறிவுறுத்தல்.

9.5. தினசரி வருகை 89% விதம் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் மொத்த கட்டணத்தில 90% விதமும் தினசரி வருகை 90% விதம் அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் 100% வித அடிப்படையில். மேற்கொள்ளுதல் ( பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகை, ஒரு குறிப்பிட்ட மட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் ஏதேனும் ஒரு காரணத்தால் மட்டுப்படுத்தப்பட்ட சந்தரப்பங்களில் உணவு தயாரிப்பவர்களுக்கு அது குறித்து முன் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தால் தினசரி வருகையை அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு அமைவாக கணக்கிடப்பட வேண்டும்.)

9.6. குறிப்பிட்ட உணவு பட்டியலின் படி உணவு வழங்குதல் கட்டாயம் என்பதுடன் அவ்வாறு வழங்கப்படாத தினங்களில் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படக் கூடாது

## 10. தகவல் முறைமை இற்றைப்படுத்தப்பட்டு பேணுதல்

10.1 கல்வி அமைச்சினால் பாடசாலை பிள்ளைகள் தொடர்பாக உணவு வழங்கும் அரசாங்க போஷாக்கு செயற்றிட்டத்திற்குரியவாறு தகவல்களை உள்ளடக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும்..

10.2 தகவல்களை பராமரிப்பதற்காக பாடசாலை மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள தரவு அதிகாரிகளின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் முறைமைக்கு உணவு செயற்றிட்டம் தொடர்பான தரவுகளை சரியாக உள்ளடக்குதல் ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுடன் கூடிய தட்டின் போட்டோ ஒன்றை தகவல் முறைமைக்கு உள்ளடக்குவது கட்டாயம் என்பதுடன், நாளாந்தம் உரிய ஏனைய தகவல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

10.3 தகவல்களை பராமரிப்பதற்காக வலய மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மூலமாக போஷாக்கு செயற்றிட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வகிக்கும் அலுவலரின் உதவியுடன் உணவு வழங்கும் செயங்விட்டத்திற்குரியவாறு பாடசாலை மட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் துல்லியத்தனமையை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான தரவுகளை ·உள்ளடக்குதல்

10.4 தகவல்களை பராமரிப்பதற்காக வலய மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மூலமாக போஷாக்கு செயற்றிட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வகிக்கும் அலுவலரின் உதவியுடன் தமது மாகாணத்திற்குரியவாறு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கின்ன துல்லியத்தன்மையை உறுதிப்பீடத்தல், தேவையான தரவுகளை உள்ளடக்குதல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்

10.5 தரவு முகாமைத்துவக் கிளையின் அதிகாரிகள் ஊடாக பாடசாலை சுகாதார மற்றும் போஷாக்கு கிளை அதிகாரியின் உதவியுடன் தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள கரவுகளின் துல்லியத்தனமையை உறுதிப்படுத்தல் மற்றும் அறிக்கைகளை தயாரித்து உரிய பிரிவுகளுக்கு முன்னிலைப்படுத்தல்.

## 11 உணவு வழங்கும் செயற்றிட்டத்திற்குரியவாறு பின்வரும் அட்டவணையை பாடசாலையினால் முறையாக பராமரிக்கப்படல் வேண்டும்

11.1. பாடசாலை அபிவிருத்தி சங்க நிபந்தனைகள் மற்றும் துணை நிபந்தனைகள்
11.2. மாதாந்த நிதி அறிக்கை
11.3. போஷாக்கு நிலை தொடர்பான அறிக்கை
11.4. அலுவலர்களின் ஒழுங்குமுறை குறிப்பேடு

11.5.பொது சுகாதார பரிசோதகர்களின் ஒழுங்குமுறை குறிப்பேடு
11.6.பாடசாலை உணவுக்குழு அறிக்கை
11.7.நாளாந்த உணவை வழங்குதல் தொடர்பான வகுப்பு மட்டத்திலான குறிப்புகள்
11.8.நாளாந்த உணவுகளின் பண்புத்தரம் மற்றும் போதியளவு தொடர்பான அறிக்கைகள்
11.9பாடசாலைகளுக்கு நேரடியாக கிடைக்கும் நன்கொடைகள் தொடர்பான அறிக்கைகள்

12. **பாடசாலை பிள்ளைகளின் மற்றும் பாடசாலை சமூகத்தின் போஷாக்கை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்கள்.**

12.1. செயற்றிட்டங்களை திட்டமிடும்போது சுகாதார அமைச்சு, பல்கலைக்கழகங்கள் (மருத்துவ பீடம், விவசாய பீடம் மற்றும் போஷதக்கு தொடர்பான பீடங்கள்), விவசாய அமைச்சு, ஆயர்வேத திணைக்களம். தேசிய கல்வி நிறுவனம் போன்ற அரச நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ளல்

12.2. செயற்றிட்டங்களை செயல்படுத்துவதற்காக தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக உலக சுகாதார அமைப்புஈ உலக உணவு செயற்றிட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்புகள் போன்ற சர்வதேச அமைப்புகளிலும். அது குறித்து செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்ளும் போது அது தொடர்பாக கல்வி அமைச்சினால் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கைகளை பேணுதல்

12.3. பாடசாலை மட்டத்தில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மற்றும் பிராந்திய விவசாய, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம், ஆயுர்வேத போன்ற நிறுவனங்களின் வள பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்.

12.4. பாடசாலை குழந்தைகளின் போஷாக்கு தொடர்பான விசேட செயற்றிட்டங்கள் பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு குழுக்கள் ஊடாக ஒவ்வொரு பாடசாலை தவனைகளிலும் நடைமுறைப்படுத்தல்

12.5. பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தொடர்பில் போஷாக்கு தொடர்பான விசேட வேலைத்திட்டங்கள் ஒவ்வொரு பாடசாலை தரனையிலும் ஆசிரியர் பெற்றோர் கூட்டங்களுக்கு இணைவாக செயல்படுத்தப்படுத்துதல்

10. **முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல்**

பாடசாலை, வலயம், மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் பாடசாலை பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

13.1. **பாடசாலை மட்டம் -**

அதிபரின் தலைமையில் பாடசாலைகள் தவணைக்கு ஒருமுறை உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல் மற்றும் அறிக்கையை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னிலைப்படுத்தல். பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டத்தின் நிகழ்ச்சிநிரலை ஒரு பகுதியாக பாடசாலை பிள்ளைகளுக்காக உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

13.2. வலய மட்டம் -

வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் பாடசாலைகள் தவணைக்கு ஒருமுறை உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல் மற்றும் அறிக்கையை மாகாணக் கல்விச் செயலாளருக்கு முன்னிலைப்படுத்தல

13.3.மாகாண மட்டம் -

மாகாண தலைமைச் செயலாளரின் தலைமையில் பாடசாலைகள் தவணைக்கு ஒருமுறை உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல் மற்றும் அறிக்கையை மாகாண தலைமைச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் நிதி ஆணைக்குழுவின் செயலாளருக்கும் முன்னிலைப்படுத்தல்

13.4 தேசிய மட்டம் -

கல்வி அமைச்சு செயலாளரின் தலைமையில் பாடசாலை தவணைக்கு ஒருமுறை உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தை நடத்துதல் மற்றும் அறிக்கையை உணவு பாதுகாப்பு தொழில்நுட்ப குழு மற்றும் உரிய ஏனைய பிரிவுகளுக்கு முன்னிலைப்படுத்தல்.

13.5 விசேட கூட்டங்களை நடாத்துதல்-தேவைகளின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் மற்றும் உரிய தரப்பினரை அறிவுறுத்துதல்

13.5 உணவு பாதுகாப்புக் குழுவின் பிரதிநதித்துவம் - தேசிய, மாவட்ட, பிராந்திய, கிராம மட்டத்தில் நடைபெறும் உணவு பாதுகாப்புக் குழு தொடர்பாக உரிய மட்டத்தில் பிரதிநிதி ஒருவரை பங்கேற்பு செய்தல் மற்றும் பாடசாலை உணவு பாதுகாப்பு குழு தொடர்பாக உரிய தகவல்களை வழங்குதல் மறும் தேவைகளின் அடிப்படையில் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்.

## 14. ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

பாடசாலை பிள்ளைகளுக்கான உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பெறும் தொகையான பணம் செலவிடப்படுவதுடன் செயற்றிட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் முறை தொடர்பாக வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான ஆய்வுகளை வருடாந்தம் மேற்கொள்வது கட்டாயமாகும். அதன்போது பின்வரும் துறைகளுக்குரியவாறு தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.

14.1 மாணவர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் - பாடசாலையில் சேர்தல், பாடசாலைக்கு வருகை தருதல் மற்றும் பாடசாலையை விட்டு வெளியேறுதல்

14.2 கல்வி அடைவு மட்டம் - 5 ஆம் தர முடிவுகள், க.பொ.த. (சா.தர)

14.3 போஷாக்கு நிலை – சரியான போஷாக்கு, குறுகிய, மெல்லிய, அதிக எடை, உடல் பருமன், சாத்தியமான சந்தர்ப்பங்களில் இரத்த சோகை

14.4 பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு சான்றிதழ் நிலை Bronze, Silver, Gold

14.5 நீர் மற்றும் சுகாதார வசதிகள் - தரமிக்க மற்றும் போதியளவு

14.6 உணவு பாதுகாப்பு

**உணவு செயற்றிட்டத்தின் நிலையன பராமரிப்பிற்காக “வீட்டுத்தோட்டத்தில் இருந்து வகுப்பிற்கு” செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

15.1.பிராந்திய உணவு உற்பத்தியாளர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல்

15.2.விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி பொருட்களின் அளவு மற்றும் விலை தொடர்பான தகவல்களை கோவைப்படுத்தல்

15.3.பரிந்துரைக்கப்பட்ட உணவு பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவு வகைகளின் மிகுதி மற்றும் தட்டுப்பாடு குறித்த தகவல்களை சேகரித்தல்

15.4.உணவு உற்பத்தி நடைமுறைகளை செயற்படுத்தல் மாற்று உணவுகளைப் பயன்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிதல்

15.5.வீட்டுத்தோட்டம் மற்றும் பண்ணைகளை பராமரிக்கக்கூடிய இயலுமையினட் அடிப்படையில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

15.6.பாடசாலைக்குரிய பிரதேசத்தின் கிராம அலுவலர்கள் உட்பட கிராம பொருளாதார மறுமலர்ச்சி, உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான பல்துறைக்

குழுக்களுடனான ஒருங்கிணைப்பின் மூலமாக பாடசாலை போஷாக்கு செயற்றிட்டத்தை, தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்காக பல்துறை உதவியை பெற்றுக்கொள்ளல்

15.7. செயற்றிட்டத்தை மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் வளங்கள் பாடசாலை மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்காக அருளாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியை முறையாக பெற்றுக்கொள்ளல்

## 16. வெளித்தரப்பினரின் உதவியை பெற்றுக்கொள்ளல்

பாடசாலை பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்திற்கு வெளி நிறுவனங்கள், அமைப்புகள், தனிநபர்கள் அல்லது குழுக்கள் முன்வரும் சந்தர்ப்பங்களில் அது பாடசாலை உணவு வழங்கும் செயற்றிட்டத்தின் சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக செயல்பட வேண்டும். அத்துடன் உரிய தகவல்கள் மாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

16.1. பாடசாலை மட்டத்திலான ஆதரவு – வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியினை பெற்றுக்கொள்ளல்

16.2. வலய மட்டத்திலான ஆதரவு - மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியினை பெற்றுக்கொள்ளல்

16.3. மாகாண மட்டத்திலான ஆதரவு - மாகாணக் கல்விச் செயலாளரின் அனுமதியினை பெற்றுக்கொள்ளல்

16.4. தேசிய மட்டத்திலான ஆதரவு - கல்வி அமைச்சு செயலாளரின் அனுமதியினை பெற்றுக்கொள்ளல்

ஆதரவை பெற்றுக்கொள்வது தொடர்பான தகவல்களை கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண தலைமை செயலாளர், மாகாண கல்விச் செயலாளரை அறிவுறுத்துவதற்காக உடனடியாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். இதுபோன்ற எத்தகைய சந்தரப்பத்திலும் தயாரிப்புகளை ஊக்குவித்தல் அல்லது ஆரோக்கியமற்ற நிறுவனங்களை பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு ஆதரவு வழங்கும் நிறுவனங்கள், ஆதரவு வழங்கும் முறை தொடர்பான தகவல்கள் வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான தகவல் முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் இரட்டிப்பாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு உணவு செயற்றிட்டத்தின் பொறுப்பு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தை சார்ந்ததாகும்.

## 17 உணவுப் பொருட்கள் நன்கொடைகளாக பெறும்போது செய்ல்படுதல்

பாடசாலை மாணவர்களின் சுகாதார நல்வாழ்வின் வளர்ச்சிக்காக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களுடன் உணவு வழங்கும் போஷாக்கு செயற்றிட்டத்துடன் உணவு வழஙகும் போஷாக்கு செயற்றிட்டத்தையும் உள்ளடக்கி செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

17.1 உணவு வழங்கும் செயற்றிட்டத்திற்கு வெவ்வேறு தரப்பினர்களின் மூலம் நன்கொடையாக உணவுப் பொருட்கள வழங்கும் சந்தர்ப்பங்களில் தினசிர் ஒரு வேளை உணவிற்காக செலுத்தப்படும் தொகையை திருத்தி நிரல் அமைச்சினால் சகல தரப்பினரையும் அறிவுறுத்துவதுடன், அதற்கு இணைவாக செயல்படுவது அவசியமாகும்.

17.2 அரசாங்க உணவு வேலைத்திட்டம் தொடர்பாக நேரடியாக பாடசாலைகளுக்கு தொடர்ச்சியாக வெளித்தரப்பினரிடம் இருந்து ந்ன்கொமைகள் கிடைக்கும் தருணங்களில் அதை ஊக்குவித்தல் மற்றும் அது தொடர்பாக வலயக்கல்வி அதிகாரிகளை அறிவூட்டுவதும், தேவையான இடங்களில் நிரல்/மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்

17.3 உணவு வகைகள் கிடைத்தல், விநியோகித்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான பொருட் பதிவு புத்தகங்களை முறையாக பேணுதல் மற்றும் அறிக்கையிடுதல்

**18 உதவி செயற்றிட்டங்களை செயல்படுத்துதல்**

பாடசாலை மாயவர்களின் ஆரோக்கியமான நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் பின்வரும் செயற்றிட்டங்களுடன் உணவு வழங்கும் அரசாங்க செயற்றிட்டத்தையும் உள்ளடக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

18.1 பாடசாலை சுகாதார ஊக்குவிப்பு செயற்றிட்டம்
18.2 பாடசாலை உணவக செயற்றிட்டம்
18.3 பாடசாலை நீர் மற்றும் சுகாதார செயற்றிட்டங்கள்

இந்த செயற்றிட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் அரசாங்க போஷாக்கு செயற்றிட்ட வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், அதற்கமைவாக செயல்பட வேண்டும்.

என்.எம். ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :- சனாதிபதி செயலாளர்
பிரதமரின் செயலாளர்
செயலாளர் - நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
செயலாளர் - பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர் - சுகாதார அமைச்சு
செயலாளர் - விவசாய அமைச்சு
செயலாளர் - நிதி ஆணைக்குழு
கணக்காய்வாளர் நாயகம்
ஆயுர்வேத ஆணையாளர் - ஆயுர்வேத திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவனம்
சகல மாகாண சபை தலைமை செயலாளர்கள்
சகல மாவட்ட செயலாளர்கள்
கல்வி அமைச்சின் சகல கிளைகளின் பதவிநிலை உத்தியோகத்தர்கள்